***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 280/2025– P.W.3 (Additional Witness )***

| | |
|---|---|
| *Name* | செல்வநாயகம் ( உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | மீனாட்சிசுந்தரம் |
| *Village* | கோட்டூர் காவல் நிலையம் |
| *Age* | *53* |

*எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலை.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.07.2026*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

1. நான் தற்போது கோட்டூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி மகப்பேறு விடுப்பில் இருப்பதாலும், மேற்படி நபரினுடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும் காலதாமத்தினை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 27.09.2024 ம் தேதியன்று கோட்டூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. ஸ்ரீநிதி என்பவர் பணியிலிருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பக்கிரிசாமி மகன் சுதாகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய மனு எண்.373/2024 ஆக மனு தாக்கல் செய்யப்பட்டு. மனு விசாரணைக்கு பின் கடந்த 01.10.2024-ம் தேதியன்று காவல் நிலைய குற்ற எண். 205/2024 ல் BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3)ன் கீழ் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா

மற்றும் சிவானந்தம் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்து, அதில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூங்கள் பதிவு செய்துள்ளார்.

4. காயம் அடைந்த சுதாகர் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும், உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்த மன்னார்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சபரிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார். (**விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என சான்று வழங்கியுள்ளார்.

5. சம்பவம் உண்மை என்று தெரியவந்ததும் எதிரியை தேடி வந்த நிலையில் ஆதிச்சபுரம் கடைதெருவில் நின்றுக் கொண்டிருந்தவரை கடந்த 03.10.2024 ம் தேதியன்று 11.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புக காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

6. இத்துடன் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 29.04.2025 ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், சரிவர புலன்விசாரணை செய்யாமலும். அனைத்து ஆவணங்களை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றாலும். பொய்யான குற்ற இறுதி அறிக்கையை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன், 24.07.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.(மு.கூ.பொ.)